மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,53,79,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

7. அறிவிப்பு.

1974-ஆம் ஆண்டு தமிழ் நாடு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/74)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1974-ஆம் ஆண்டு தமிழ் நாடு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/74) சட்டமன்ற மேலவையில் 30—3—1974 ஆம் நாளன்று ஆய்வுக்கு எடுக்கப்பட்டு பரிந்துரை ஏதுமின்றி நிறைவேற்றப் பட்டுள்ளது என்று மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.00 மணிக்கு ஒத்திவைக்கப் பட்டது.

8. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

221. Notification issued with G.O. Ms. No. 403, Excise and Prohibition, dated the 14th December 1973, in regard to closure of all liquor shops including arrack shops in the whole of State of Tamil Nadu on 25th December 1973. [Laid on the table of the House under section 34 (5) of the Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971).]

B. *Reports, Notifications and Other Papers.*

'Nil'.